**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC.216/2021

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சேதுபதி SI Rtd. | Prosecution | LW-7 as PW-5 |
| Father Name | துரைசாமி | Defence | |
| முகவரி | பொறையார் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 55/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**29.07.2025 எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.01.2025 ம் தேதி பணி ஓய்வு பெற்றுமேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அருள்குமார் தற்போது உயிருடன் இல்லை. அவருக்காகவும் நான் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சமயத்தில் நான் வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 26.06.2020 ம் தேதி காலை 10 மணிக்கு வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அருள்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது கந்தசாமி மகன் அருண்ள என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலைய குற்ற எண் 551/2020 இதச பிரிவுள் 294b, 353 ஆக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முரளி மற்றும் கலீன் அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த ஆவணங்கள் அசாஆ. 3 மற்றும் அசாஆ 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

2. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் முன்பிணை பெற்று இருந்ததால் அவரை கைது செய்யவில்லை. கடந்த 04.01.2021 ம் தேதி நான் இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294b, 353 கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கில் சாட்சிகள் VAOவின் உதவி யாளர்கள் என்றால் சரிதான். அந்த ஊரில் உள்ள யாரையும் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சிகள் முரளி மற்றும் கலீம் என்பவர்கள் சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் மேலும் தாங்கள் போலிசார் எங்களிடம் கையெழுதது எதுவும் வாங்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

2. சம்பவம் நடந்தது 13.06.2020 என்றால் சரிதான். ஆனால் நான் முதல் தகவல் அறிக்கை 13 நாட்கள் கால தாமதமாக பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் என்னுடைய இறுதி அறிக்கையில் 26.06.2020 ல் சாட்சிகளை அழைத்து சென்று சம்பவ இடத்தில் விசாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 13 நாட்கள் கால தாமத்திற்கு காரணம் ஏன் என்றால் புகார்தாரர் பொய்யான புகாரை கொடுத்ததால் வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் அரசு அதிகாரி வைத்து எனக்கு அழுத்தம் கொடுத்ததால் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. உண்மையில் அன்றைய தினம் சட்ட விரோதமாக மணல் எடுத்திருந்தால் வழக்கு பதிவுசெய்திருப்பேன் என்றாலும் வாகனத்தையும் பறிமுதல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. மேலும் சம்பவ இடத்தில் இருந்த அந்த JCB ஓட்டுநரையும் கைது செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

3. புகார் தாரர் புகாரில் புகார் கொடுக்கும் போது அன்றைய தினம் பணியில் இருந்ததாரா என்பதற்கு வருகை பதிவேடு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. சாட்சிகள் கிராம உதவி ஆய்வாளர் திலகவதி என்பவர் வருகை பணி பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாசில்தாரிடமிருந்து பரிந்துரைக்கபட்ட புகார் வந்ததா என்றால் நேரடியாக புகார் வந்தது. இந்த வழக்கில் புகார்தாரர் புகார் கொடுக்கும் போது புகாரிலும், எனது விசாரணையிலும் கெட்ட வார்த்தை பெயரை சொல்லி புகாரை கொடுக்கவில்லை என்றால் சரிதான். இறுதி அறிக்கை யில் நான் தான் அவர் சொல்லாத வார்த்தையை நானாகவே சேர்த்துகொண்டேன் என்றால் சரியல்ல.

4. புகார் தாரர் அசா.1 சட்டவிரோதமாக மணல் அள்ளியதாக JCB வாகணத்தின்

பதிவு எண் மற்றும் அடையாளம் பற்றி புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அப்படி எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று புகார்தாரர் பணியில் இருந்தாரா சம்பவம் முடிந்த பிறகு பணியில் தொடர்ந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது போன்ற எந்தவிதமான சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எதிரியிடம் கையூட்டு கேட்டிருந்தார் அதனை எதிரி கொடுக்காததால் புகார் தாரர் ஆத்திரமடைந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் அவர் புகார் கொடுத்தும் அது உண்மையான புகார் அல்ல என்று பொய்புகார் என்று கருதி நான் உடனடியா நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் கால தாமதமாக 13 நாட்கள் கழித்து தான் அரசு அதிகாரியின் அழுத்தத்தின் காரணமாக புகார் தாரர் அரசுஊழியர் என்பதால் எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கையும் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**